**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 48/2021** **தேதி: 06.04.2026**

**வா.சா. 1 – சுந்தரேசன்**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் இந்த வழக்கு 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். இந்த வழக்கு 1ம் பிரதிவாதி முருகன் இரண்டு திருமணம் செய்தவர் என்றால் சரிதான். நான் இரண்டாவது மனைவியின் மகன் என்றால் சரிதான். முதல் மனைவி இறந்த பின்னர் தான் எனது தாயாரை 1ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். முதல் மனைவி பத்மாவதியின் மூலம் பிறந்தவர் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி மணிமேகலை என்றால் சரிதான். மாரியம்மாள், நல்லம்மாள், பாக்கியலட்சுமி ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எனது நிருபண வாக்குமூலத்தில் பத்தி 4ல் 1ம் பிரதிவாதிக்கும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்குஇடையே நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பாகத்திற்கு கிடைத்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை எப்போது, எங்கு நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினை எனது தாயார் மூலம் தெரிந்து கொண்டேன். வாய்மொழி பாகப்பிரிவினை நடக்கும் போது நான் பிறக்கவில்லை எனது தாயார் சொல்லி தான் எனக்கு தெரியும். வழக்கு சொத்தில் நான் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. அனைவரின் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது.

வழக்கு சொத்துக்களுக்கு எனது பெயரில் மின் கட்டணமோ, வரி ரசீதோ இல்லை என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் தான் உள்ளது. கூட்டு அனுபவத்தில் உள்ள சொத்தை நான் பராமரித்து வருகின்றேனா என்றால் எனது அப்பா தான் அதை பராமரித்து வருகிறார். 1 ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்தியத்தில் வாங்கியது என்பதை என்னால் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வாங்கப்பட்ட காலத்தில் நான் இளையவராக இருந்தேனா அல்லது பிறக்கவே இல்லையா என்றால் 1ம் பிரதிவாதி தனது சொந்த சம்பாத்தியத்தில் சொத்துக்களை வாங்கவே இல்லை. நான் பிராதில் சொல்லியுள்ளது போல் சொத்து சம்பந்தமான பிரச்சனை 2021 ல் ஆரம்பமானது என்றால்சரிதான். அது சம்பந்தமாக நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் செய்தி தாளில் சொத்து சம்பந்தமாக விளம்பரம் கொடுத்துள்ளோம். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோமா என்று தெரியாது. நான் நீதிமன்றத்தில் வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி தனித்து பாத்தியப்பட்ட சொத்தை அவர் உயிருடன் இருக்கும் போது பாகம் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் கூட்டு குடும்பமாக தொடர்பில் வாழ்ந்து வருகிறோம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் வரை ஒரே

குடும்பமாக தான் இருந்தோம். எனது தாயார் 1ம் பிரதிவாதியின் மீது ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தாயாரின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த சொத்து விபரம் அதிகம் என்றும், அதற்கு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், அதில் நான் உரிமை எதுவும் கோர முடியாது என்றும் , அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.